DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2024 ம் ஆண்டு ஜீன் மாதம் 13 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | -தென்னரசு **PW- 33** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |

(எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது.)

<u>முதல் விசாரணை:</u>-

நான் பெரம்பலூர், கல்பாடி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 03.09.2012 ம் தேதி நான் பெரம்பலூர் வடக்கு கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிய போது பரமேஸ்வரன் என்பவர் கிராம உதவியாளராக இருந்தார். அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் பெரம்பலூர் காவல் நிலையத்தில் இருந்து வெளியூரில் இருந்து ஒரு வழக்கு தொடர்பாக கம்பையநல்லூர் காவல் ஆய்வாளர் பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் அருகில் வந்திருப்பதாகவும், அவர்களுக்கு உதவி செய்யும்படியும் தகவல் வந்தது. அதன் பேரில் நானும், என்னுடைய உதவியாளரும் சாமியப்பன் நகருக்கு சென்றோம். அங்கு மேற்படி காவல் ஆய்வாளருடன் தமிழரசன் மகன் பிரித்திவிராஜ், ராஜேந்திரன் மகன் பாஸ்கர் என்ற பெரம்பலூர் ரோவர் கல்லூரியில் பணிபுரிந்த இருவர் இருந்தார்கள். அவர்கள் எங்களை எதிரி பிரபாகரன் என்பவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். மேற்படி பிரபாகரனின் வீடு சாமியப்பன் நகரில் இருந்தது. மேற்படி இருவரும் பிரபாகரன் என்பவரை காவல் ஆய்வாளரிடமும்,

எங்களிடமும் அடையாளம் காட்டினார்கள். காவல் ஆய்வாளர் விசாரித்த போது பிரபாகரன் என்பவர் TNPSC Group IV மற்றும் Group II வினாத்தாள்களை பெற்று விற்றதாக ஒப்புக் கொண்டார். மேற்படி விசாரணை சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது. அதன் அடிப்படையில் காவல் ஆய்வாளர் பிரபாகரனை கைது செய்தார். கைது செய்தவுடன் பிரபாகரன் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை கொடுத்தார். அதை காவல் ஆய்வாளர் மடிக்கணினியில் அங்கேயே பதிவு செய்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னுடைய வீட்டின் அறையில் ஒரு நோக்கியா செல்போன், லெனோவா லேட்டாப், 59 பக்கங்கள் கொண்ட கையால் எழுதப்பட்டு நகல் எடுக்கப்பட்ட TNPSC Gr. II வினாத்தாள்கள் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், உதவியாளர் பரமேஸ்வரன், எதிரி பிரபாகரன் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் கையெழுத்து செய்தோம். 2.30 மணிக்கு மேல் மேற்படி எதிரி பிரபாகரன் தன்னுடைய வீட்டில் இருக்கும் ஒரு அறையில் இருந்து நோக்கியா செல்போன் ஒன்று, லெனோவா லேப்டாப் ஒன்று, கையால் எழுதப்பட்டு நகல் எடுக்கப்பட்ட 59 பக்கங்கள் கொண்ட TNPSC Group II வினாத்தாள்கள் ஆகியவற்றை எடுத்து காவல் ஆய்வாளரிடம் கொடுத்தார். அதை காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். நான் சாட்சியாக இருந்தேன். கைப்பற்றுதல் மகசரில் நானும், உதவியாளரும் கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி லேப்டாப் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, வினாத்தொகுப்பு சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. செல்போன் சா.பொ. 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக CB CID போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என எடுத்துரைக்கப்பட்டது.

A4, A6 to A9, A11, A12, A18, A19, A22 to A24, A26 to A28, A29, A30 தரப்பில் குறுக்கு விசாரணை :

முதல் விசாரணையில் நான் குறிப்பிட்ட விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றாலும், போலிசார் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த

ஆவணங்களில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிற எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தங்களுடையதாக ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.